# ஒரு கோச் வண்டியின் கதை!





மே '97-ல்

லயன் காமிக்ஸ்

# லயன் கோடை மலர்!

ரூ.25 = டெக்ஸ் வில்லர் & Co.வின் மூ...சு...நீ...ள... கதை!





# ஹாட் - லைன்

வாசக நண்பர்களே,

வணக்கம். புதிதாய் துவங்கியுள்ள 1997 நம் அனைவருக்குமே நன்மை தரும் ஆண்டாய் அமைய வேண்டுமென்ற பிரார்த்தனையோடு இந்தப் பகுதியைத் தொடங்குகிறேன்!

இம்மாதம் **காமெடி கௌ-பாய் லக்கி லூக்கின்** விலா நோகச் செய்யும் ஒரு முழுநீளக் கார்டூன் சாகஸம் உங்களுக்காகக் காத்துள்ளது! வழக்கம் போல முழு வண்ணம்! So - படித்து; சிரித்து; ரசித்து முடித்த பின்னர் உங்கள் விமர்சனங்களை மறக்காமல் அனுப்பிடுங்கள்! இந்த இதழில் **"நரகத்தைப் பார்த்தேன்"** சித்திரத் தொடர்கதையின் இறுதிப் பாகம் வந்துள்ளது! மனித வரலாற்றில் ஒரு நீங்கா கறையாக அமைந்திட்ட உலக யுத்தத்தின் பாதிப்பை படம் பிடித்துக் காட்டியுள்ள இந்தத் தொடரையும் உங்கள் விமர்சனங்களில் எதிர்பார்க்கிறேன்! மறந்து விடாதீர்கள்!

இந்தப் பகுதியை வெகு முன்னதாகவே எழுதுவதால் - சென்ற வெளியீடான **"பூமிக்கொரு ப்ளாக் மெயில்"** பற்றிய review செய்திட முடியவில்லை. அதே போல 1996-ல் நமது லயனின் performance பற்றிய ஆய்வும் அடுத்த இதழில்...!

அடுத்த இதழாக வரவிருப்பது சூப்பர் கௌ-பாய் டெக்ஸ் வில்லரின் 50 பக்க சாகஸமான **"மரண நடை!"** விலை ரூ. 5/- டெக்ஸ் வில்லர் standard-படி இது குட்டிக் கதையே! எனினும் கடுகு சிறுத்தாலும் காரம் குறைவதில்லையே! படிக்கத் தவறாதீர்கள்!

மார்ச் மாதமும் இன்னுமொரு கௌ-பாய் தான்! புதிய காமெடி ஹீரோவான **ஜாக்கி ஸ்டாரின் "ஹாலிவுட்டில் ஜாலி"** வெடிச் சிரிப்புகளை வரவழைக்கத் தயாராகி வருகிறது!

சித்திரத் தொடர்கதை முடிந்து விட்டதால் அதன் இடத்தில் வேறு என்ன replace செய்வது என்ற யோசனை எனக்கு! (இன்னொரு காமிக்ஸ் தொடர்கதையா?... அல்லது ஏதாவது கட்டுரைத் தொடரா... அல்லது பொது அறிவுப் பகுதியா?) உங்கள் suggestions என் குழப்பத்தைத் தீர்த்திட உதவுமே!

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்! அனைவருக்கும் அட்வான்ஸ் பொங்கல் வாழ்த்துக்கள்! Bye!

**S. விஜயன்.**

*லயன் காமிக்ஸ் மாத இதழ் வெளியிடுவோர்:*
***பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,***
*தபால் பெட்டி எண் : 374, 8/D-5, சேர்மன் P.K.S.A.A. ரோடு,*
*அம்மன் கோவில்பட்டி, சிவகாசி - 626 189. ஆசிரியர்: **S. விஜயன்.***
*அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ்,*
Phone: 04562 - 21159/72649
Fax :04562 - 72649




ஒரு கோச் வண்டியின் கதை!
கொலராடோ - டென்வர் செல்லும் வழித்தடம்... விடியற்காலை.
தனிமையே என் துணைவன்! தனிமையே என் வாழ்க்கை!
DENVE
இந்த இடம்தான் ஜாலி ஜம்ப்பர்!
ஐய... மதுபானக் கடைக்கு இப்படிக்கூட பெயர் வைப்பாங்களா என்ன ?
WELLS FARGO & CO
என் பெயர் லக்கி லூக்! என்னை இங்கே வரச்சொல்லி உங்க டைரக்டர் மிஸ்டர் ஓக்லீப்பிடமிருந்து கடிதம் வந்தது...
ஓ..! யெஸ் ஸார்..! பாஸ் உங்களை எதிர்பார்த்துத்தான் உட்கார்ந்துக்கிட்டிருக்கார்!
ஓ.. மிஸ்டர் லூக்! வந்துட்டீங்களா..? ரொம்ப ரொம்ப தாங்க்ஸ் !
என்னை எதற்காக இங்கே வரச் சொல்லி எழுதினீங்க?
போக்குவரத்து கம்பெனிகள்லேயே பிரபலமானது எங்களோடதுதான்னு ஊரே அறியும்... எங்க கோச்சு வண்டிகள்லே பயணம் செய்யறது பாதுகாப்பானதுன்னு ஜனங்க நெனைக்கிறாங்க... ஓரிடத்திலேர்ந்து இன்னோர் இடத்துக்கு தங்கத்தை கொண்டு போறதுக்கும்கூட எங்களோட சேவைதான் நம்பகமானது...
...ஆனா, சமீப காலமா வழிப்பறி கொள்ளையர்கள் புற்றீசல் மாதிரி பெருகிப்போயிட்டாங்க... வழிப்பறியினாலே ஏற்படுகிற இழப்பை பயணிகளுக்கு நாங்க முழுமையா ஈடுபண்ணிடறதாலே ஏகப்பட்ட பண இழப்புங்கிறது மட்டுமல்ல...
...ஜனங்களுககு எங்க மேலே நம்பிக்கை வரவர கொறைஞ்சுக்கிட்டே வருது... எங்க கோச்சு வண்டியிலே பயணம் செய்ய பயப்படறாங்க... எங்களோட பெருமை கேள்விக்குறியாயிட்டு வருது...
...அதனாலேதான், இப்படியொரு சவாலில் இறங்கினோம்...
இதுவரை இல்லாத அளவு தங்கத்தை ஏற்றிக் கொண்டு நாளை எங்களுடைய கோச்சு வண்டி ஒன்று டென்வரிலிருந்து சான்பிரான்ஸிஸ்கோ செல்லவிருக்கிறது.
டிரைவா :- ஹாங்க் புல்லி
வெல்ஸ் பார்கோ & கோ தங்கம் பத்திரமாக இலக்கை சென்றடைவதை உறுதி செய்ய பாதுகாப்புக்கு கீர்த்தி பெற்ற வழித்துணைவர் திரு. லக்கி லூக்கின் சேவையை ஏற்பாடு செய்திருக்கிறது.
வெல்ஸ் பார்கோவினரின் பயணங்கள் என்றைக்குமே தடைப்படாது!



நீங்க சரின்னு சொல்லிட்டா உடனே இந்த போஸ்டர்களை ஊர் முழுக்க ஒட்டச் சொல்லிடுவேன்!
சொடேர்!
ஹா...ஹா...ஹா...
அவர்தான் ஹாங்க் புல்லி... கம்பெனி டிரைவர் - சாட்டையை சொடுக்கிறதிலே கூட எவ்ளோ சாகஸம் பார்த்தீங்களா?
?
மூப்!
!!!
ஹாங்க்! இவர் - லக்கி லூக்...
ஹா.. ஹா..! நீயும் பலே கில்லாடிதான்னு நிரூபிச்சுட்டே! நாம ரெண்டு பேரும் சேர்ந்தா தூள்கிளப்பிடலாம்...
அறிமுகம் முடிஞ்சுதா? ஓ.கே. இந்த போஸ்டரை என்ன செய்ய... லூக்?
செம ஜோக்கா இருக்கும்ப்பா இந்தப் பயணம்! டென்வர் - ஃபோர்ட் பிரிட்ஜர், ஸால்ட் லேக், ஸிடி, கார்ஸன் ஸிடி, ஸாக்ரமெண்டோ, சான் பிரான்ஸிஸ்கோ! வேடிக்கை என்னன்னா... ஒண்ணு - தாண்டவே முடியாத மலை முகடுகள், ரெண்டு - வறுத்தெடுக்கும் பாலைவனங்கள்
மூணு - மேலே பாய காத்திருக்கும் செவ்விந்தியர்கள், நாலு - பயங்கர மேடு பள்ளங்கள் நிறைந்த சாலைகள்... இவைகள் மட்டுமில்லை. ஊர்லே இருக்கிற அத்தனை போக்கிரிகளும் நம்மை தாக்க வாய்ப்பை எதிர்பார்த்து பின்னாலேயே வருவானுக.
ஹுய்ய்... போஸ்டரை ஒட்டச் சொல்லிடுங்க!
யாஹூஹூ...
கிரிங்!
கூப்பிட்டீங்களா பாஸ்?
போஸ்டரை ஒட்ட ஆட்களை ஏற்பாடு பண்ணுங்க... வெல்ஸ் பார்கோவினரின் பயணங்கள் என்னிக்குமே தடைப்படாதுன்னு ஜனங்க புரிஞ்சுக்கட்டும்!



நான் போய் ஒப்பந்த வாசகத்தை எழுதறேன்... மிஸ்டர் லூக் நாளைக்கு காலையிலே நீங்க கிளம்பறீங்க
வாப்பா... கடைக்குப் போயி ஊத்திக்கிடுவோம்!
அதெப்படி போஸ்டர்கள் அதுக்குள்ளாற வந்திச்சு?
சுத்த பைத்தியக்காரத்தனம்
வண்டி மட்டும் பத்திரமா சான்பிரான்ஸிஸ்கோ போய்ச் சேரலை அப்புறம் வெல்ஸ் பார்கோவை இழுத்து மூட வேண்டியது தான்
அப்புறம் அழுக்குத் துணி மூட்டையைக் கூட அதிலே ஏத்தி அனுப்ப ஜனங்களுக்கு நம்பிக்கை வராது!
தூத்தேறி... தனியா ஆடறபோது கூட பித்தலாட்டமா...உருப்பட மாட்டேடா கழுதை!
ஸ்காட் கண்ணா! மொள்ளமாறிப் பயலே... இன்னுமா உன்னை தூக்கிலே போடலை?
ச்சூ... மொள்ளப் பேசு ஹாங்க்... இப்பத்தான் ஊருக்குள்ளே வந்தேன்... யாருக்கும் என்னைப் பத்தி தெரியாது... ஏமாந்த சோணகிரி எவனாவது போக்கர் ஆட வந்து மாட்டுவானுகளான்னு பார்த்துக்கிட்டிருக்கேன்!
ஆமா... உன்னோட சீட்டாட வர்றவன் நிச்சயம் மாக்கானாத்தான் இருப்பான்...
நாளைக்கு சான்பிரான்ஸிஸ்கோ போக இருக்கிற உன்னைவிடவா? நீ சான்பிரான்ஸிஸ்கோ போய்ச் சேரமாட்டேன்னு ஒண்ணுக்கு இருபது பந்தயம்னு சொல்லிப்பார் ஒரு பய பந்தயதுக்கு வரமாட்டான்.
சூதாட்டத்திலே ஸ்காட் பலே கில்லாடி... அவனோட நீ சீட்டாடாத வரைக்கும் அவனை நீ தோழனா நெனைச்சுக்கலாம்
குஸ் ரெண்டு கொண்டாப்பா...
ஹாங்க்... ம்ம்.. வந்து கேட்கிறேனேன்னு தப்பா நெனைச்சுக்காதே... நாளை புறப்படறதுக்கு முன்னாடி பாக்கி மொத்தத்தையும் பைசல் பண்ணிடுப்பா... நான் புள்ளைக்குட்டிக்காரன்


எதையுமே நம்பிக்கையோட பார்க்கிற நல்ல குணம் இந்த ஊர் ஜனங்ககிட்டே கிடையாதோ... ஓ.கே.. நான் தூங்கப் போறேன் - நாளை பார்ப்போம்!
மறுநாள் காலையில் -
WELLS FARGO & CO
அடடே, ...வாங்க மிஸ்டர் லூக்... நேரத்துக்கு வந்திட்டீங்க
அதோ... ஹாங்க் வண்டியோட வர்றான்!
& CO
பளாரர்!
3.5/8 வினாடிகளுக்குப் பின் -
WELLS FARGO & CO
?!?
ஹாங்க் எங்களோட டாப் டிரைவர்!
பயணிகளையும், தங்கத்தையும் ஏத்துங்க - கிளம்பிடுவோம்
இந்த மாதிரியான பயணத்திலே பயணிகளும் வர்றாங்களா-என்ன?
என்ன சந்தேகம்...? வெயிட்டிங் ரூம்லே காத்துக்கிட்டிருக்காங்க-வந்து பாருங்களேன்.


பயணிகள் இவங்கதான் - மிஸ்டர் லூக்
ஹலோ! உங்களோட வழித்துணை லக்கி லூக் நான்தான். இந்தப் பயணம் படு ஆபத்தானதா இருக்கும்னு உங்களுக்குத் தெரியுமில்லே?
அதனாலேதான் நான் வந்திருக்கேன்! என் பேரு ஜெர்ரி... கோச்சு வண்டியை கொள்ளையடிக்கறச்சே த்ரில்லிங்கான காட்சிகளை படம் எடுக்கப் போறேன்... அந்த மாதிரி ஒரு அரை டஜன் படத்தை வெளியிட்டேன்னா பாப்புலராகிடுவேன்
என் பேரு ஸ்டப்பிள்... வண்டியிலே வர்ற தங்கத்திலே என்னோட தங்கமும் இருக்கு... தோண்டி எடுக்க நான் பட்ட கஷ்டம் இருக்கே... அப்பப்பா... சொல்லி மாளாது... அப்படி கஷ்டப்பட்டு சேகரிச்ச தங்கத்தை பத்திரமா பாதுகாக்க நானே கிளம்பிட்டேன்
என் பேரு ராலர்... மை ஸன்! சான்பிரான்ஸிஸ்கோவிலே போதனை கூட்டங்கள் நடத்தப் போறேன்... அங்கே இருக்கிறவங்களுக்கு இப்போ அறிவுரை நிறையத்தான் தேவை!
அரபெல்லா பிலிம்ஸி என் பேரு... கூட இருக்கிற என்னோட கணவர் சான்பிரான்ஸிஸ்கோவிலே கணக்கரா இருக்கார்... அவசரமா அவர் வேலைக்குத் திரும்பணும். நான் துணைக்குப் போறேன்.
ஒரு பெண் இந்தப் பயணத்திலே பங்கெடுப்பது சரின்னு உங்களுக்குத் தோணுதா?
நான் வந்து -
நீங்க என்ன சொல்ல வர்றீங்கன்னு புரியுது... ஆனா ஒலிவரை நான் தனியா அனுப்புறதா இல்லை
பண்ணிய தப்புக்கு வேதனைப்படு... ஸன்!
நீங்க அஞ்சு பேர்தான்... நல்லா வசதியா உட்கார்ந்துக்கிட்டுப் போகலாம்
ஹாங் கொஞ்சம் பொறு...இன்னொரு பயணியும் வர்றார் சேர்த்துக்கோ!


ஹே... யாரது - ஸ்காட் ? இது என்னப்பா... கோமாளி வேஷம்?
போக்கர் ஆட இந்த நண்பர்கள் கிடைத்தார்கள்! தொடர்ந்து நானே வெற்றி பெற்றேன்! தோல்வியை பக்குவமாய் ஏற்றுக் கொள்ளும் பண்பில்லை இவர்களிடம்!
சூதாடறது பாவம்... மை ஸன் -
அது வந்து ஃபாதர் சூதாட்டத்தை விஞ்ஞான பூர்வமாய் நடத்திட நினைத்தேன்...! முன்னேற்றத்தைக் காண சகிக்கவில்லை இவர்களுக்கு!
ஊரைவிட்டு ஓடிப்போறியா இல்லே தூக்கிலே தொங்க விடவான்னு கேட்டோம்!
நான் எடுத்த முடிவு சரியா தப்பா - தெரியலை... சான்பிரான்ஸிஸ்கோவை பார்க்கணும்னு நெடுநாளைய ஆசை ஒண்ணு இருந்தது - அதான்! இறக்கிவிடுங்கப்பா...
தூக்கிக்கிட்டு வந்ததுக்கு நன்றி
ரெண்டு நிமிஷம் பொறுங்க - சுத்தம் பண்ணிட்டு வந்திடறேன்
அந்த ஆளை எனக்குப் பிடிக்கலை... இறங்கச் சொல்லுங்க
இங்கே விட்டோம்னா அவனை தூக்கிலே போட்டிருவாங்க... ஊர்பேர் கெட்டிடும்... நம்மோட வரட்டும் - அத்தோடு பயலுக்கு துப்பாக்கியை கையாளத் தெரியும்
நம்மோட வரப்போற தங்கம்!



வாசலில் -
பயணிகள் வர்றாங்க
மறை கழன்ற கேஸ்கள்
சரியா சொன்னே! இதிலே போறதை விட நேரே சவ வண்டியிலேயே ஏறிக்கலாம்!
உயிர் மேலே ஆசையில்லாத ஜென்மங்கள்... இல்லேன்னா இந்த பயணத்திலே பங்கெடுப்பாங்களா...?
அதோ... தங்கம் வருது
கவனம்... கவனமா ஏத்துங்க
அலட்டிக்காதே ஸ்டப்பிள்... உன்னோட தங்கத்தை பத்திரமா உள்ளே வச்சு பூட்டிடுவோம்!
ஃபோர்ட் பிரிட்ஜர், ஸால்ட் லேக் ஸிடி, கார்ஸன் ஸிடி ஸாக்ர மெண்ட்டோ மற்றும் சான்பிரான்ஸிஸ்கோ போற பயணிகள்லாம் ஏறிக் குந்துங்க வண்டியிலே!
அந்த மாறுவேஷத்திலே ஒரு போட்டோ எடுக்க நெனைச்சேன் - கலைச்சிட்டு வந்து நிற்கிறானே
வழியிலே நெறைய சான்ஸ் கிடைக்கும் உனக்கு
எல்லாம் ரெடியா, லூக்?
ரெடி... ஹாங்க்!
யீஈஈ... ஹாஆஆ... பிளாக்கி! ஹா... ஹஹ்...அபாச்சே! ஹூப் யீயீயீ ஹாஹா ஆஆ...
யா ஹூ ஹூ ஊ ஊ...
குண்டன் தான் அலட்டிக் கிறான் என்றால் இவருமா?



வெல்ஸ் பார்கோவின் தலையெழுத்தை அந்த கோச்சு வண்டி தான் நிர்ணயிக்கப் போறது...
கரடு முரடான பாதை - தூக்கித் தூக்கிப் போட்டது...
டநங்
ஆலிவர்! என்னோட தொப்பியை திருப்பி கொடுக்கச் சொல்லுங்க அந்த ஆள்கிட்டே!
வண்டி ஒரேயடியா தூக்கிப் போடுது... லேடீஸ் சங்கடப்படறாங்க...
இதுக்கே அலட்டிக்கிட்டா எப்படி... வழியிலே இன்னும் எவ்வளவோ சிரமம் காத்துக்கிட்டிருக்கு... பொறுமையா இருக்கச் சொல்லுங்க...
பாதர்... மேலே இருக்கிற கார்டு ஆட்டியன் ஆஸ் என்கிறேன் - பந்தயம் ஒண்ணுக்கு அஞ்சி... வர்றீங்களா?
அது ஆட்டியன ஆஸாக இல்லாம இருக்கணும்னா ஏதாவது அற்புதம் நிகழ்ந்தால்தான் உண்டு... எனக்கு அற்புதங்களில் நம்பிக்கை கிடையாது....
பந்தயத்தை நான் ஏத்துக்கறேன்
அற்புதம் தான்!
!
ஹே... ஹாங்க் - பார்த்து ஓட்டுப்பா... வண்டி போனதபா மேட்டிலே ஏறி இறங்கினதிலே எனக்கு அஞ்சு டாலர் நஷ்டம்


டென்வரைச் சேர்ந்த போக்கிரிகள் நம்மை வழிப்பறி பண்ண உத்தேசித்திருந்தா அதோ அந்த மேட்டுக்குப் பின்னாடிதான் ஒளிஞ்சுக்கிட்டிருக்கணும்!
நான் முன்னாடி போய் ஒரு நோட்டம் விடறேன்
?
நில்லுடா,... கோச்சு வண்டியை கொள்ளையடிக்க வந்திருந்தா அப்படியே திரும்பி ஓடிப் போயிடு... ஏன்னா நான் அதுக்காகவே நேற்று ராத்திரிலேர்ந்து இங்கே காத்துக்கிட்டிருக்கேன்
அப்படின்னா நீயும் போயிடு... நான் நேற்று அஸ்தமனத்துக்கு முன்னாடியே வந்துட்டேன்!
பில்... அங்கே என்ன கலாட்டா?
என்னோட கோச்சு வண்டி அது... வேற எவனாச்சும் குறுக்கே வந்தீங்க... தெரியும் சேதி
ஆங்... இவரோட வண்டியாமில்லே... எழுதியா வச்சிருக்கு?
வாயை மூடுங்கடா... கஸ்மாலங்களா... லக்கி லூக் வந்திட்டிருக்கான்... கவனிக்கலையா?
லக்கி லூக்!
ம்... பிடிங்க ஓட்டம்! இல்லேன்னா நேரே ஷெரீப்பிடம் கொண்டு போய் சேர்த்துப்பிடுவேன்!
அடேய்... பாவிங்களா... ஒரு வண்டியை வழிப்பறி பண்ண இத்தனை பேரா!



அங்கே மூட்டை மாதிரி ஏதோ கிடக்கே... என்ன அது?
கொர்ர்!
ர்ர்...
டுமீல்!
ம்ம்ம்
கோச்சு வண்டி எங்கே?
அது... எப்பவோ போயாச்சு
ஒவ்வொரு தபாவும் இதே தப்பைத்தான் பண்ணித் தொலைக்கிறேன்... வண்டிக்காக காத்திருக்க நல்ல இடமா தேடி, பொழுதைக் கழிக்க காப்பியை குடிச்சு, பேப்பரை படிச்சி கும்பகர்ணனாட்டம் தூங்கிப்புடுறேன்!
!!!!!
ஹோய்ய்!
நிறைய தங்கத்தை ஏற்றிக் கொண்டு வெல்ஸ் பார்கோ கோச்சு வண்டி ஒன்று டென்வரிலிருந்து சான்பிரான்ஸிஸ்கோவுக்கு வாடிக்கையான தடத்தில் போகிறது... வெல்ஸ் பார்கோவின் பயணம் என்றைக்குமே தடைப்பட்டதில்லை...
காட்டிலே கண்டெடுத்தேன்... என்ன போட்டிருக்கு - பார்!
எல்லா பத்திரிக்கையிலுமே இப்படி நியூஸ் வந்திருக்கும் போலிருக்கு... வழி நெடுக ஆயிரம் பேராவது காத்திருப்பானுக!
வெல்ஸ் பார்கோவின் பயணம் தடைப்பட்டதேயில்லைன்னு நாடு முழுக்க பறைசாற்ற இது அருமையான சந்தர்ப்பம் இல்லையா... அதான் போட்டிருக்காங்க!
எல்லோரையும் நமக்கு எதிரா தூண்டி விடறமாதிரி ஆயிடுச்சு. ஊர் போய்ச் சேருவோமான்னா சந்தேகம்தான்!
என்னோட தங்கம் பத்திரமாயிருக்கில்லே?
இருக்கு - கவலைப்படாதே சாலை மேடு பள்ளமா இருக்கிற இடம் தவிர மற்ற நேரங்கள்லே ஸ்காட்கிட்டே பந்தயம் கட்டாதே... இல்லேன்னா ஊர் போய் சேர்றதுக்கு முன்னாடி மொத்த தங்கமும் அவனோடது ஆயிடும்!


அதோ... முதல் ஸ்டேஷன்! ராத்திரி இங்கே தங்கிப் போகலாம்!
ஹாங்க்! இங்கே வந்து சேருவேன்னு நான் நினைக்கவேயில்லை... தங்கமெல்லாம் பத்திரமா இருக்கா?
ஆலிவர்... அந்த... ம்ம்... ஆள் கிட்டே சாப்பிட என்ன இருக்குன்னு கேளுங்க...
உங்களுக்கு கறியும், பீன்ஸும் ரெடி! குதிரைகளுக்கு - ஓட்ஸ்!
பேசாம குதிரைகளோட சேர்ந்து ஓட்ஸ் சாப்பிட்டிடலாமோ?
யாராச்சும் என்னோட சீட்டாட வர்றீங்களா?
நான் வரேன்!
போறாத காலம்...!
இப்படி மழை பெய்ஞ்சா பாதை மோசமாயிருமே
என்ன பண்றது? நான் போய் தங்கத்துக்கு பாதுகாப்பா வண்டியிலேயே படுத்துக்கறேன்
நள்ளிரவில் -
காலடியோசை... வெளிச்சம் - யாரோ போக்கிரி...




கைகளை தூக்கு - மேலே!
படார்!
ளைப்ப்...
ஸ்டப்பிள்! உனக்கென்ன... தூக்கத்திலே எழுந்து நடக்கிற வியாதியா!
ம்ம்... வந்து... என்னோட தங்கம் கொஞ்சம் வேணும் - ஸ்காட்கிட்டே நெறைய தோத்துட்டேன்
இப்ப எடுக்க முடியாது - சான்பிரான்ஸிஸ்கோ போய்ச் சேர்ந்தா மொத்தமா எடுத்துக்கோ... போ... போய் தூங்கு!
ஒரு விஷயம் லூக்... நான் தரவேண்டிய தங்கத்தை ஸ்காட்கிட்டே நான் கொடுத்தப்பறம் வழிப்பறி நடந்தா நஷ்டம் அவனோடது... தங்கம் என்கிட்டே இருந்து வழிப்பறி நடந்துட்டா ஸ்காட்டுக்கு நான் கடன் பட்டதா இருந்துடுமே...
காலை சிற்றுண்டி - கறியும்... பீன்ஸூம்
இப்போ கொடுத்தானே சூடா அது என்ன திரவம்னு கேளுங்க ஆலிவர்...
அது கரப்பி - ஒண்ணுக்கு பத்து... யார் வர்றா பந்தயத்துக்கு ?
நான்!
ஃபோர்ட் பிரிட்ஜர், சால்ட் லேக் ஸிடி, கார்ஸன் ஸிடி ஸாக்ரமெண்ட்டோ, சான்பிரான்ஸிஸ்கோ போற பயணிங்கள்லாம் வண்டியிலே ஏறிக்கோங்க...
யீயீ... ஹா... ட்ரம்பட் ... ஹா.. நவஜோ... ஹுப்.. ப்ருனோ ஹோ... ஸியோக்ஸ்!
சேரு இருக்கே... வண்டி போயிடுமா?
வெள்ளைக் குதிரை வெள்ளையா இருந்தால்தான் அழகு... சேற்றிலே இறக்கிட்டீங்களே!
வண்டி சேற்றிலே மாட்டிக்கிச்சு!
கிளாவர் ஆங் - ஸ்கார் ! நான் தான் ஜெயிச்சேன்!



எல்லோரும் வண்டியை விட்டு கீழே இறங்குங்க...
என்னை நல்லா பிடிச்சுக்கோங்க ஆலிவர்! சேறு பட்டு என்னோட அழகு டிரெஸ் பாழாயிடக் கூடாது!
ஓ.கே... அரபெல்லா - குதி!
ஆலிவர்...! விளையாட இதுவா நேரம்?
?!
க்ளக்
சக்கரத்தை தள்ளி கரை சேர்க்க எல்லோரும் ஒத்தாசை பண்ணுங்க...
ம்ம்... போட்டோ எடுக்க அரிய சந்தர்ப்பம்
நான்... ம்ம்னு சொன்னதும் தம் பிடிச்சு நகர்த்துங்க
கறை போக்கித் தைலம் உங்க கைப்பெட்டியிலே தானே இருக்கு ஆலிவர் - போய் எடுத்தாங்க
யாரும் அசையக் கூடாது -குறிப்பா... லக்கி லூக் - நீ!
இங்கே குழி தோண்டி சேற்றை ரொப்பி வச்சதே நான்தான் அகப்பட்டுக்கிட்டீங்களா..? எடுங்க தங்கத்தை
யாரும் அசையக் கூடாது!




சுச்சு... சுட்... சுட்டுவிடாதே!
தாங்க் யூ... இனி நீ காரியத்தை தொடரலாம்
?
க்ளிக்!
ஹா ஹா...! நல்ல காரியம் பண்ணினே ஜெர்ரி...! சரியான மாங்காமடையனா இருப்பான் போலிருக்கு
எங்க பயணம் தடைப்பட்டதுக்கு காரணம் நீதான்கிறதாலே வண்டியை மேட்டிலே ஏற்றித்தற்ற பொறுப்பு உன்னைச் சேர்ந்தது.
எதிர்பாராது கிடைத்த உதவியை அடுத்து -
மறுபடியும் எங்கேயாவது என் கண்ணிலே தென்பட்டே தொலைச்சுப்புடுவேன் தொலைச்சி!
எல்லோரும் ஏறிக்கோங்க!
டுமீல்!
வேறு தடங்கல் ஏதுமின்றி இரண்டாவது ஸ்டேஷனை வந்தடைந்தார்கள்
உள்ளே வாங்க...! கறியும், பீன்ஸூம் உங்களுக்காக ரெடியாயிட்டிருக்கு!
அதென்ன குமட்டுற நாற்றம்
காப்பிங்கிறேன் - பத்துக்கு ஒண்ணு, பந்தயம் - ஸ்காட்?
சாப்பாடு ரெடி!
மறுநாள் -
ஹாங்க்... இன்றைய பயண விபரம் எப்படி?
மலைப் பகுதியிலே போகப் போறோம்! ஏகப்பட்ட தமாஷா இருக்கும்!


கரடு முரடான மலைப்பாதை சரிவில் ஏறிக் கொண்டிருந்தது அந்தக் கோச்சு வண்டி...
ஹீஈஈ...யாயா... என்னருமை தோஸ்துகளே... ஹீ...ஸ்டார்! ஹா...ஸ்பீடி! ஹோ... செயன்னீ! ஹாயா...சில்வர்!
பே ரப் பாரு பேரை... சகிக்கலை!
உள்ளாற இருக்கிற ஆம்பளைங்க கொஞ்சம் இறங்கி வண்டியை தள்ளீங்களா...
யீயீ... ஹா! ஹு... ஸ்காட், ஹா..ஆலிவர்! ஹோ... ஸ்டப்பிள் ஹுப்ப்... பாதர்!
ஒவ்வொரு ஸ்டேஷன்லேயும் புதுசா பாசஞ்சர்கள் யாராச்சும் ஏறினா எவ்ளோ நல்லாயிருக்கும்!
முன்னாலே போய் கொள்ளைப் பசங்க யாராச்சும் இருக்கானுகளான்னு பார்க்கிறேன்
மலை மேட்டின் உச்சியில்...
வாவ்...! ஹாங்கை எச்சரிக்கணுமே!
பாறை சரிவு ஏற்பட்டு பாதை அடைச்சுக் கிடக்கு!
வோவ்... நில்லுங்க - என் ப்யூட்டிகளா!
இப்பவும் தள்ளச் சொல்லுவாங்களா - ஐயோ.. தேவனே!


ஒரு ஐடியா...! குதிரைகளை கழற்றி தனியா மறுபக்கம் கொண்டு போயிடுவோம்... வண்டியை ஆம்பளைங்கள் சேர்ந்து தள்ளிட்டுப் போயிடலாம்...
...மறுபக்கம் போனபிறகு குதிரைகளை பூட்டிக்கலாம்!
ஏன்...? சான்பிரான்ஸிஸ்கோ வரை நாங்களே தள்ளிட்டுப் போயிடறோமே!
ம்ம்... எல்லோரும் ஒட்டு மொத்தமா சேர்ந்து தள்ளுங்க...
ஹோ...
குதிரைகளை கொண்டு போய் மறுபக்கம் சேர்த்துட்டேன்பா லூக்
ஆலிவர்..., பார்த்து ... பார்த்து
இறுக்கிப் புடிங்க... மறுபக்கம் சரிவு செங்குத்தா இருக்கு -மெதுவா வுடணும்...
என்னோட கோச்சு வண்டி போச்சு!
என்னோட கேமரா போச்சு!
தறிகெட்டு ஓடுது!
என்னோட தங்கம் போச்சு!
உன்னோட மனைவி தொலைஞ்சாள்!
குதிச்சு தப்பிச்சுடுவா - பந்தயம் பத்துக்கு ஒண்ணு!
நான் கட்டறேன்!


ஆலிவர்...
காப்பாத்துங்க
லக்கிலூக் ஜாலி ஜம்ப்பரை புயல் வேகத்தில் விரட்டிச் சென்றார் -கோச்சு வண்டியின் பின்னால்
சரிவின் அடிவாரத்தில் பொறுமையிழந்து காத்துக் கிடந்தான் ஒரு போக்கிரி...
என்ன இழவு... ரெண்டு மணி நேரத்துக்கு முந்தியே வந்திருக்கணுமே அந்த கோச்சு வண்டி... வெல்ஸ் பார்கோவைக் கூட இப்போ நம்ப முடியலியே...
ம்ம்ம்... வண்டி வந்தவுடன் எப்படி நிறுத்தச் சொல்றதுன்னு இன்னொரு தபா ஒத்திகை பார்க்கலாம்! 'ஏய் நில்லு!'
ஏய் நில்லு நில்லு...
சொல்றேன்லே...
நில்லுலு.....
தாங்க்ஸ் சொல்லக்கூட நேரம் இல்லியாக்கும்?
அப்பாடா... பிரேக் பிடிக்குது!
வண்டி ஒருவாறாக ஓய்ந்து போய் நின்றது -
மிஸஸ் பிலிம்ஸி - நல்லா இருக்கீங்களா?
நான் மட்டும் ஒரு லேடியா இல்லேன்னா கொச்சை வார்த்தைகள்லே சொல்லியிருப்பேன் இந்த பயணத்தை நீங்க நடத்திச் செல்கிற லட்சணத்தை!


அன்பே... அரபெல்லா -நலமாக இருக்கியா?
ஓ...! ஏன் கேட்கிறீங்க?
நீ எனக்கு பத்து டாலர் தரணும்!
ஆலிவர்! என்ன இது? என் தலை மறைஞ்சதும் சூதாட ஆரம்பிச்சுட்டீங்களா?
இந்தப் பந்தயத்திலே ஒரு அர்த்தம் இருக்கு டியர்?
மூன்றாவது ஸ்டேஷன்...
மெனு என்னப்பா... இங்கே?
மாட்டுக் கறியும்... டர்னிப்பும்!
கறியும், பீன்ஸும்னு பந்தயம் கட்டினவங்கள்லாம் பணத்தை எடுங்க...
இது ஒரு வகை அற்புதம்...
எனக்கும், ஸ்காட்டுக்குமிடையே இப்படியொரு ஒப்பந்தம் ரொம்ப நாளா இருக்கு!
பின்னர் -
ஒரு யோசனை கேட்கிறேன் உன்கிட்டே...! ஃபோர்ட் பிரிட்ஜருக்கு நேர் வழியிலே போனா காத்து நிற்கிற வழிப்பறி கும்பலுக்கு டேக்கா கொடுத்துட்டு பாதையை விட்டு விலகி வடபுறமா போயிட்டா நல்லதில்லையா?
நீ சொல்ற வழியிலே செவ்விந்தியர்களோட நடமாட்டம் இருக்குமே...
ஓட்டுக்கு வுட்டுடுவோம் -வழிப்பறி கொள்ளையர்களா... செவ்விந்தியர்களான்னு?
செவ்விந்தியர்களுடைய ஆர்வம் எல்லாம் நம்மோட கபால தோல்மீது தானே தவிர தங்கத்தை சீண்டக்கூடமாட்டாங்க... அதனாலே என் ஓட்டு செவ்விந்தியர்களுக்கே!
அவங்ககிட்டே பேசி எங்க மதத்தை பரப்ப ஒரு வாய்ப்பு கெடைக்கலாம்.
தலை விழுந்தா செவ்விந்தியர்கள்.
ஆங் - தலைதான்!
வெறுப்பேத்தற கயவர்களைவிட செவ்விந்தியர்களே தேவலாம்
ரெண்டுவிதமான கருத்துக்கு இடமே இல்லாம போயிட்டுது!


மறுநாள் காலை -
எல்லோரும் ஏறுங்க...
எல்லோருக்கும் துப்பாக்கியை உபயோகிக்க தெரியுமில்லையா?
வார்த்தைகள்தான் என் ஆயுதம் - மை ஸன்!
அவரும் உன்னை மாதிரித்தான் போலிருக்கு டியர்!
மாற்று வழியில் பயணத்தை தொடர்ந்தது அந்த கோச்சு வண்டி
ஆலிவர் ஜாக்கிரதை... உங்களையே காயப்படுத்திக்கா ங்க!
அதே சமயம் - ஒரு மேட்டில்...
வெல்ஸ் பார்கோ கோச்சு வண்டி வருது... போய்ச் சொல்லு
வோ...!
வெல்ஸ் பார்கோ கோச்சு வண்டி வருது...!
வோ...!
வெல்ஸ் பார் கோ கோச்சு வண்டி வருதாம்!
வோ...!
தொம்... தொம்!
வெல்ஸ் பார்கோ கோச்சு வண்டி வருது... எல்லோரும் ஓடியாங்க


ஒரே மயான அமைதியா கெடக்கு - வயித்தை கலக்குது!
கேட்டேல்லே...! அதோ வந்துட்டானுக செவ்விந்தியர்கள் - இப்போ திருப்திதானா?
யீஹா... சூறாவளி! ஹா... ஸ்பீடி! ஹுப்ப்... ப்ளாஷ்! ஹோ... உப்ப்... கெட்டதுபோ...
கம்பெனியிலே இருக்கிற எல்லா குதிரைகளையும் எனக்குத் தெரியும்... ஆனா ஒண்ணு புதுசா இருக்கே - எப்படி வந்தது?
ஹோ... அனாமதேயம்...!
துப்பாக்கியை எடுத்து சுடுங்க... நம்மகிட்டே துப்பாக்கி இருக்கிறது தெரிஞ்சா விலகிப் போயிடுவானுக...
டுமீல் டுமீல்!
வண்டியை ஒரு நிமிஷம் நிறுத்தப்பா... ஒரே ஒரு போட்டோ புடிச்சுக்கறேன்!
ஆவ்வ..!
டுமீல்
யார் கத்தினது?
ஹாம்மரிலே விரலை வெட்டுட்டேன்...!
கொண்டாங்க இப்படி!
எந்தக் காரியத்தைத்தான் நீங்க இதுவரை உருப்படியா பண்ணியிருக்கீங்க?
டுமீல்! டுமீல் டுமீல்!


நம்மை நெருங்குகிற எண்ணமே இல்லாம சுடுவரம்புக்கு அப்பாலேயே பின் தொடர்ந்து வர்றாங்க... ஏன்னு தெரியலை?
முன்னாலே பார்... உன்னோட கேள்விக்கு விடை புரியும்!
ஐயோ... சுத்தி வளைச்சுக்கிட்டானுகளே... அத்தோட எல்லோரிடமும் ரைபிள் இருக்கு!
ஆமா... முன்பெல்லாம் நம்மகிட்டே துப்பாக்கி இருக்கும்... அவனுக வில்லும் அம்பும்தான் வச்சிருப்பானுக... இப்போ - காலம் ரொம்பத்தான் மாறிப்போச்சு... தொடர்ந்து மேலே போறதிலே அர்த்தமில்லை...
டிரைவர்! ஏன் வண்டியை நிறுத்திட்டீங்க?
அவங்க எண்ணிக்கையிலே நிறையப் பேர் மேடம்... தாஜா பண்ணிக்கிட ஏதாவது செய்யணும்!
அன்பே... உன்னோட முத்துமாலையை தந்திடலாம்!
முத்து மாலையா...? அது எங்க குடும்ப சொத்து -உங்களுக்கென்ன பைத்தியமா ஆலிவர்?
பேச்சு வார்த்தை நடத்தறதை தவிர வேறு எதுவும் செய்யறதுக்கில்லை!
நல்ல யோசனை... முயன்று பார்!
ஹலோ... என்னருமை செவ்விந்திய சகோதரர்களுக்கு வணக்கம்... என்னோட மொழி தெரிஞ்ச ஆள் யாராச்சும் இருக்கீங்களா...
வோ!
வெள்ளையர்கள் நாங்கள் உங்களோட பிரதேசத்தின் வழியாக பயணத்தை தொடர அனுமதி கோருவதாக போய் உங்க தலைவர்கிட்டே சொல்லு!


ருவாஹாஷோ ஹிமாஹெளவா ஹோஷா வெல்ஸ் பார்கோ டிபி வெளபீ வெளட்டா!
ஷோ... வாவா அஹீஸா மாகா மாகா வோஷா மிஸிஹோகா
தலைவர் சொல்றாரு -வெள்ளையர்கள் எல்லோருமே...ம் வந்து... வந்து...
சொறிநாய்கள்?
இல்லை!
பித்தலாட்டக்காரர்கள்?
இல்லை!
மஞ்சள் தோல் நரிகள்?
பொய்யர்கள்?
ஆங்... அதுதான்!
தலைவர் சொல்றாரு ஆங்கிலேயர்களின் பேச்சு ஒன்றாகவும் செயல் வேறாகவும் இருக்குமாம்... எங்க கிராமத்துக்கு வண்டியை ஓட்டிட்டு வாங்க
தலைவரும், மாந்திரீகரும் கூடிப்பேசி உங்க தலைவிதியை நிர்ணயிப்பார்கள்!
வோ!
என்ன ஆச்சு?
நாம மட்டும்னா தலை தெறிக்க ஓட்டம் பிடிச்சுடலாம்... ஆனா வண்டியிலே பாசஞ்சர்களோட அது சாத்தியமல்லை... அவங்க வழியிலே போய்தான் தப்பிக்கணும்
பாதர்...! போதனை செய்ய இதுதான் சரியான தருணம்...
நான் இப்போ என்ன சொன்னாலும் உங்க மண்டையிலே ஏறப் போறதில்லை.
நாம் தப்பிச்சுக்கிடறோம் - ஒண்ணுக்கு பத்து... பந்தயத்துக்கு வர்றியா ஸ்காட்?
மாந்திரீக வைத்தியரோ...? இது என்ன கிறுக்குத்தனம்!
நம்ம விதி இவ்னோட கையிலே - தொலைஞ்சோம்!



இங்கே இவர்தான் செல்வாக்குள்ள ஆசாமி போலிருக்கு - விடுங்க... நான் பேசிப் பார்க்கிறேன்
ஐயோ... மேடம் - காரியத்தை கெடுத்திடாதீங்க
ஐயா... பெரிய மனிதரே... நெறய பயணத்திலே ரொம்ப லோல்பட்டு இங்கே வந்திருக்கோம்... எங்களை படுத்தாதீங்க... என் புருஷன் சான்பிரான்ஸிஸ்கோவில் அக்கவுண்டண்டா நாளை பொறுப்பு எடுத்தாகணும்... போகவிடுங்க...
...உங்க அனுமதிக்கு ஒரு வெலையா இந்த முத்து மாலை கள்லே ஒண்ணை நீங்க எடுத்துக்கலாம்... ரெண்டும் எங்க அம்மா எனக்கு சீதனமா கொடுத்தது...
ஹா..ஹா... ஹௌபாடி!
மாந்திரீகர்! சொல்றார் - இது போலியாம்!
ரசனையற்ற காட்டு மிராண்டி!
கவலம்பா! சொகாஹோ போகா! போகா!
மாந்திரீகர் சொல்கிறார் - வெள்ளையர்களை எல்லாம் கொல்லணும் தேவதை கனவிலே வந்து சொல்லிச்சாம்.
ஆலிவர்... நக்கலா சிரிக்க இதிலே என்ன இருக்கு?
போக்கர் ஆட்டம் தெரியுமான்னு மாந்திரீகர்கிட்டே கேளு... அதை வச்சு
விலகு... நான் பேசிப் பார்க்கிறேன்!
எங்ககிட்டே ஒரு மாயாஜாலக்காரர் இருக்கார்... எங்களை நிம்மதியா போக விடலைன்னா சாபம் போட்டிடுவார்... நீங்க நாசமா போயிடுவீங்க!
ஹோ... ஹோ... ஹோ...
மாந்திரீகர் கிண்டலா சிரிக்கிறார்!


எங்க மாயா ஜாலக்காரரோட திறமைக்கு இப்போ ஒரு சாம்பிள் காட்டறோம் - பார்த்துட்டு சொல்லுங்க
அவர் கில்லாடி இல்லைன்னு ஆயிட்டா உங்க மண்டைத் தோலை உரிச்சுடுவோம்னு தலைவர் சொல்றார்!
லூக்... இந்த விஷப்பரீட்சை வேணாம்ப்பா...!
சும்மா புலம்பாதீங்க
ஜெர்ரி... இந்த தபாவும் நீதான் எங்களை காப்பாற்றப் போறே என்னை ஒரு படம் எடு...
அது வந்து...
...படம் எடுக்க வெளிச்சம் போறாதே
வேற வழியே இல்லை அப்பனே!
எங்க மாயாஜாலக்காரர் தன்னோட மந்திரப் பொட்டிக்குள்ளே என்னோட உருவத்தை சிறைப்பிடிச்சு அப்புறமா அதை ஒரு தாளிலே வெளியே கொண்டாருவார்...
ஜெர்ரி... எல்லோரோட உசுரும் உங்கையிலேதான் இருக்கு
சூரியனைப் பார்த்து நில்லுப்பா...
லக்கி லூக்...
என்ன
கொஞ்சம் சிரியேன்!


ரெடியா... அசையாதே... கேமராவையே பார்... ஆங்... - ஆச்சு!
படத்தை டெவலப் பண்ண இருட்டு ரூம் வேணுமே!
நான் ஏற்பாடு பண்றேன்!
யாரோட பார்வையும் படாத இடத்துக்கு இப்போ எங்க மாயாஜாலங்காரர் போகணும்... அவர் தேவதையான சூரியன் கூட அவரை பார்க்கக் கூடாது... அவர் ஆவிகளோட பேசப்போறார்
வோ...
கவனமா டெவலப் பண்ணி பிரிண்ட் போட்டு கொண்டு வா ஜெர்ரி... கோட்டை விட்டியோ இதுதான் நீ எடுத்த கடைசி போட்டோவா இருக்கும்...
எல்லாமே நல்லபடியாக நடந்து முடிய ஆண்டவனை பிரார்த்திப்போம்!
கெடுத்திட்டு வந்து நிற்கப் போறான் - பத்துக்கு ஒண்ணு
நான் கட்டறேன்
அ..அ..அதோ - வர்றான்!
சரியா வரலை!
கேட்டியா ஜெர்ரி - எடு பணத்தை!


போட்டோ கிராபர்னு சொல்லிக்கவே வெட்கமா இருக்கு
கொடு... பார்ப்போம்!
ஓ!
ஓ... சூப்பரா வந்திருக்கு - இது போதும்!
பெருந்தன்மையா பேசறேப்பா...! படத்தை கூர்ந்து பாரு - ஒண்ணரை கண்ணன் மாதிரி இருக்கே நீ!
பார்த்தீங்களா... எங்க மாயாஜாலக்காரரோட சாகசத்தை! இதுமாதிரி உங்க மாந்திரீகராலே சாதிக்க முடியுமா?
ஹொகா?
ஹொகா... போடோபோடோ ஓவ்! ஹௌபா பே
ஹாவ்வ்!
அட... மண்ணாந்தைகளா... உங்க மண்டையிலே மசாலா இவ்ளோதானா?
உங்க மாயாஜாலக்காரர் படே ஆசாமிதான்னு தலைவர் ஒத்துக்கறார்... அவரோட கோபத்துக்கு ஆளாக தைரியமில்லை... உங்களை பத்திரமா அனுப்பி வைக்கச் சொல்றார்.
யீ...ஹா சூறாவளி! ஹாய்ய்... ஸ்பீடி!... ஹுப் ப்ளாஷ்!
இப்படியாக லக்கி லூக்கின் போட்டோ செவ்விந்தியர்களின் புனித கம்பத்தில் மாட்டப்பட்டு காலம் காலமாக தொழப்பட்டு வந்தது...


பயணத்தில் முதல் ஊரை நாம் ஒரு வழியா வந்து சேர்ந்துட்டோம்... அதோ -ஃபோர்ட் பிரிட்ஜர்!
வெல்ஸ் பார்கோ கோச்சு வண்டி வருது...! ஓடியாங்க
சாதாரணமாக தூங்கி வழியும் அந்த ஊரில் கோச்சு வண்டி வந்து சேரும் செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது...
ஃபோர்ட் பிரிட்ஜர்...! வண்டி ஒரு நாள் முழுகக இங்கே நிற்கும்... லாட்ஜ், மதுபானக்கடை எல்லா வசதியும் இருக்கு... நாளைக்கு ஸால்ட் லேக், காரஸன் ஸாக்ரமெண்டோ... ஸான்பிரான்ஸிஸ்கோவுக்கு கிளம்பும்!
ஹுர்ரா...
யிப்பீபீ...ஈ...
தூள்...!
WELLS FARGO FORT BRIDGER DEPOT
வெல்ஸ் பார்கோவுக்கு இங்கே நான்தான் ஏஜெண்ட்... ஏதாவது செய்தி உண்டா?
விசேஷமா எதுவுமில்லை...
தங்கத்தோட நீங்க இவ்ளோ தூரம் பத்திரமா கடந்து வந்து சேர்ந்தது... ஆச்சரியமான விஷயம்... உங்களை எச்சரிக்க வேண்டியது என்னோட கடமை : - ஊர்லே இருக்கிற அத்தனை மொள்ளமாறி பயல்களும் உங்க வரவை எதிர்பார்த்து ஸால்ட் லேக் ஸிடி போற பாதையில் பதுங்கிக் கிடக்கானுக...
கேட்டியா... இந்த தபாவும் நாம ரூட் மாறி போனாத்தான் ஊர் போய் சேரலாம்
பாதை மாறிப் போனா வெட்டவெளியிலே படுத்துக்க வேண்டி வரும்!
எல்லோரும் ஹோட்டலுக்குள்ளேதான் போனாங்க... வா - போய் கேட்போம்!
SPLENDID PALACE HOT
என் மனைவிக்கு தனி பாத்ரூம் வேணும்!
12ம் நம்பருக்கு ஒரு ''பாத் ரூம்'' ஏற்பாடு பண்ணுப்பா!
தோ... ரெண்டு நிமிஷத்திலே ரெடி பண்ணிடறேன்!


லாட்ஜில்
நான் சொல்ற ரோடு இதுதான்... இது வழியா போனா செவ்விந்தியர்களோ, திருட்டு பசங்களோ குறுக்கிடமாட்டாங்க... ஆனா ஒரே ஒரு சங்கடம் என்னன்னா வழியிலே ஸ்டேஷன் எதுவும் இருக்காது... என்ன சொல்றீங்க ?
எனக்கு சம்மதம்
இவளே சொல்லிட்டா... அப்புறம் என்ன?
நீங்க எந்தப் பாதையிலே வேணா. போங்க... நான் இங்கேயே தங்கிடறதா தீர்மானிச்சுட்டேன்... இங்கே 'தொழில்' ரொம்ப நல்லா நடக்க வாய்ப்பு இருக்கும்னு தோணுது!
எல்லோரும் கவனமா கேட்டுக்கோங்க... நாம பாதை மாறிப் போற விஷயம் பரம இரகசியமா இருக்கணும்... தண்ணியடிச்சாலும் இந்த விஷயத்தை மட்டும் யார்கிட்டேயும் உளறிடாதீங்க... ஆபத்தா போயிடும்.
நான் உன் கூடவே இருந்திடறேன்!
அதுதானே பார்த்தேன் -ஊத்திக்க எங்கேயாவது போகலாம்னு ஆசை இருந்தா மூட்டைகட்டி வச்சிடுங்க!
நான் குடிக்கிறதேயில்லை!
ஊரை பல கோணங்கள்லே படம் புடிக்கவே எனக்கு நேரம் சரியா இருக்கும்!
நான் தங்கத்துக்கு காவல் நிக்கப்போறேன்!
நான் மதுபானக்கடைக்குள்ளே போனாலும் சத்தியமா குடிக்கப் போறதில்லை!
மிச்சம் இருக்கிறது நாம் ரெண்டு பேர்தான் போலிருக்கு - வா... போய் ஜாலியா ஊத்திக்குவோம்
மதுபானக்கடையினுள் -
டிங்... டிங்...
டிங்.. டிடிங்டிங்
ரிரிங்
ஹே... ஹாங்க் பையா -சௌக்கியமா?


எப்ப வந்தாலும் இவனுகதான் உட்கார்ந்திருக்கானுக...
தெரியுமா சேதி... ஊர்லே இருக்கிற அத்தனை கஸமாலங்களும் உங்களை எதிர்பார்த்து ஸால்ட் ஸிடி போற பாதையிலே காத்துக் கிடக்கானுக...
துப்பாக்கி, தோட்டா விக்கிற கடையிலே செம வியாபாரம்... சுத்தமா தொடைச்சுட்டுப் போயிட்டானுக!
நானும் சேர்ந்துக்கலாமா?
போக்கர் ஆடத் தெரியுமா உமக்கு?
ஆளுக்கு அஞ்சு கார்டு வச்சு ஆடுவாங்களே அந்த ஆட்டம்தானே ?
ஆங்... அதேதான்...! உட்காருமய்யா!
துப்பாக்கியை வெளியிலே எடுத்து வச்சிடறதுதான் இங்கே சம்பிரதாயம்...
ஓ... அதுக்கென்ன - செஞ்சுட்டா போச்சு!
ஜோரா இருக்கு! எங்கே வாங்கினீங்க?
நானே செஞ்சது... நான்தான் இங்கே துப்பாக்கி வியாபாரம் பண்றேன்... இருந்த சரக்கு அத்தனையும் இன்னிக்கு வித்துப் போயிட்டுது... அதனாலே கையிலே காசு தாராளமா புழங்குது...
ஹிக்... நாளைக்கு ஹிக்... நாம போற... ஹிக்... பயணம் இருக்கே -
ஹாங்க்... மூடு வாயை -நெறைய குடிச்சுட்டே... பார்வை பொட்டைத்தனமா இருக்கு...
பொட்டைப் பார்வையா? நானா...? என்ன வார்த்தை சொல்லிட்டே... தோ..பாரு - அந்த பியானோ வாசிக்கறவன் வாயிலே இருக்கிற சிகரட் துண்டை கச்சிதமா குறி வைக்கிறேன்!
ஹே... ஹிக்... லக்கி - நீ சொன்னதுதான் சரி... வா... ஹிக்... நாம... இங்கேர்ந்து போயிடலாம்... ஸாரி ஜோ...!


மறுநாள் காலை -
WELLS FARGO & Co
FORT BRIDGER
DEPOT
ஸால்ட் லேக் ஸிடி, கார்ஸன், ஸாக்ரமெண்டோ, மற்றும் சான்பிரான்ஸிஸ்கோ போற பயணிகள்லாம் வண்டியிலே ஏறிக் குந்துங்க - ஜல்தி!
.. அப்படி இறுக்கமா கட்டாதீங்க!
எல்லோரும் வந்தாச்சா?
கொஞ்சம் நிறுத்துப்பா...!
ஸ்காட்...! என்னடா இன்னமும் ஆளைக் காணோமேன்னு பார்த்தேன்
இதோ... நொடியிலே சுத்தம் பண்ணிக்கிட்டு ஓடி வந்திடறேன்
அதையடுத்து -
யீ...ஹா - ஒயிட் ஃபுட்! ஹா... டெம்பெஸ்ட்! ஹுப் ஃப்ரீஸ் ஹே... ஸ்வீட்டி பை!
யீ... ஹா... ஜாலி ஜம்ப்பர்!
அடேங்கப்பா-இந்த அலட்டல் அவசியம்தானா?
வாடிக்கையான பாதையில் ஆர்ப்பாட்டமாக பயணத்தை தொடங்கிய அந்த கோச்சு வண்டி சற்றுத் தொலைவு சென்றதும் தடம் மாறி ஓடத் தொடங்கியது...
இந்த பாதை மாற்றத்தால் ஏமாந்து போனவர்கள் பல பேர்...
எங்கே போய் தொலைஞ்சாங்க...? ஒரு மணி நேரத்துக்கு முன்னாடியே இங்கே வந்திருக்கணுமே!
ஊஹூம்... அவங்க வருவாங்கன்னு தோணலை... இனியும் இங்கே நிற்கிறது சுத்த பைத்தியக்காரத்தனம்
அந்த கடிகாரத்தை என்கிட்டே கொடுத்திட்டு திரும்பிப் பார்க்காம ஓட்டம் பிடி...


ரொம்ப தூரம் வந்துட்டோம்... பாதை வேறு கரடு முரடா இருக்கு... குதிரைகள் களைச்சுட்டுது - இங்கே முகாம் அமைப்போம்
சரி
இந்த பொட்டல் வெளியிலேயா தங்கப் போறோம்?... தலை விதி - சரி... சாப்பாட்டுக்கு ஏதாவது ஏற்பாடு பண்ணியிருக்கீங்களா?
பண்ணியிருக்கோம் மேடம்... எதையும் சரியா திட்டமிட்டு செய்யறதிலே வெல்ஸ் பார்கோ என்னைக்கும் சோடை போனதில்லை
நான் உங்களுக்கு இப்போ தயாரிச்சு போடப்போற சாப்பாடு படு ஜோரா இருக்கும்... காலம் காலமா இதைப்பத்தி நீங்க பாராட்டிப் பேசிக்கிட்டே இருப்பீங்க!
ஓ.கே...! அப்படி என்ன அயிட்டம்?
கறியும், பீன்ஸும்!
ஆலிவர்...! அந்த ஆளைப்பத்தி நான் என்ன நெனைக்கிறேன்னு போய்ச் சொல்லுங்க!
தோ... போறேன் டியர்!
சரி... சரி - சண்டை வேண்டாம்! ஹாங்க்... நீ தீயை மூட்டு நான் போய் எதையாச்சும் வேட்டையாடி கொண்டாறேன்!
இங்கே ஏதாச்சும் தகராறுன்னா ரைபிளை சுடு - வந்துடறேன்
டுமீல்! டுமீல்!
காட்டுக் கோழிகள் - ஏழெட்டை அடிச்சுட்டேன்..! எல்லோருக்கும் வாய்க்கு வாய்க்கு ருசியா கெடைக்கும்!
என்ன இழவு இது... என்னோட காதுகிட்டே துப்பாக்கியை வச்சு சுட்ட சத்தத்தை அடுத்து ஏன் எதுவுமே கேட்கலை எனக்கு?



புரியலியே! புகை வரவேயில்லை... அங்கே ஹாங்க் என்ன பண்ணிக்கிட்டிருக்கான் - தீயை மூட்டாம?
ஜாலி ஜம்ப்பர்... நீ இங்கேயே இரு!
ம்ம்...
ஹே... திருட்டுப் பயல்கள்!
அந்த பூட்டை சுடு... ஹெர்ப்!
பாவிங்களா... நான் கஷ்டப்பட்டு சேகரிச்ச தங்கம் அது!
டுமீல்!
ஹெர்ப்...! குறி தவறுவது சகஜம் தான்னாலும் - இப்படியா?
வ.. வந்து நான் சுடவேயில்லை!
பார்த்தாயா...!
டுமீல்! டுமீல்! டுமீல்!



லக்கி லூக் திரும்பி வர்றான் -வாங்க ஓடிப் போயிடுவோம்
டுப்! டுப்!
டுப்!
ஹே... நில்லுங்க... ஒரே ஒரு போட்டோ மட்டும் -
ஜாலி ஜம்ப்பர் என்ன ஆச்சு உனக்கு - திடீர்னு செவிடாகிப் போயிட்டியா?
ஹாங்க்... அவர்களை விடாதே - துரத்து!
அப்பாடா... மறுபடியும் கேட்க முடியுது!
யீ.. ஹா... ஒயிட்புட்!
த்சொ... கடவுளே - சேணத்தை எல்லாம் கழட்டினப்புறம் எந்தக் குதிரை எதுன்னே எனக்கு அடையாளம் தெரியமாட்டேங்குது... ஹே... டெம்பெஸ்ட்
விஷ்க்
திருடர்கள் புயல் வேகத்தில் தப்பியோடி தலைமறைவாகிவிட்டார்கள்.
சரியான நேரத்துக்கு நீ திரும்பி வந்தே லக்கி லூக் - நீ அந்தப் பக்கமா போன உடனேயே வந்துட்டானுக!
பச்! சக்!
நம்மிடையே யாரோ ஒரு கருங்காலி இருக்கான்!



வாய்ப்பு கிடைக்கும்போது இருக்கிற எல்லாத்தையும் சுருட்டிக்கிட்டு ஓடற நோக்கத்தோடு திட்டமிட்டு நம்மோட வந்துக்கிட்டிருக்கான்... ஏன்னா, நாம் ரூட் மாறி போய்க்கிட்டிருக்கிற சங்கதி நாம எட்டு பேருக்கு மட்டுமே தெரிஞ்ச ரகசியம்!
வந்த சோதாக்கள் அவனோட கூட்டாளிகள்... நான் விலகிப் போனதும் 'சிக்னல்' கொடுத்து வரவழைச்சிருக்கணும்
இவன்தான் அந்தக் கருங்காலி! சூதாட்டத்திலே ஏற்பட்ட கடனை அடைக்க பணம் வாங்கிக்கிட்டு நம்மை இவன் காட்டிக் கொடுத்திருக்கணும்!
நானா... சீட்டிலே தோற்கிறதா - நல்ல கதை!
அப்படீன்னா அந்த கருங்காலி இந்த ஸ்டப்பிளாத்தான் இருக்கும்... சொந்த தங்கத்தையே திருடற அளவுக்கு பயலுக்கு தங்கத்தின் மேலே அப்படி ஒரு வெறி!
அந்த கருங்காலி நீயாத்தான் இருக்கும்டா குள்ளக் கத்தரிக்கா! தங்கம் கெடைச்சுட்டா அந்த தைரியத்திலே பிடாரிகிட்டேர்ந்து கத்தரிச்சுக்கிட்டு சான்பிரான்ஸிஸ்கோ போய் ஜாலியா இருக்கலாம்னு திட்டம் போட்டிருப்பே!
என்ன சொன்னே - பிடாரியா...? யார் - நானா!
இந்த போட்டோகிராபர்தான் அந்த கருங்காலியோ? போக்கிரிகளோட சகவாசத்துக்காக ஏங்குகிற பய இவன்தான்! இவனோட படங்களுக்கு தங்க பிரேம் போட்டுத்தர்றதா அவனுக பேரம் பேசியிருக்கலாம்
இப்படியும் இருக்கலாமில்லே! அங்கே கண்ணு மண்ணு தெரியாம ஊத்திக்கிட்ட நீ கூட உண்மையை உளறி ஊரறிய செய்திருக்கலாமே!
அமைதி... அமைதி
சரியா னீங்க பாதர்! அந்த கத்திலேர்ந்து மன அமைதி தர்ற வாசகங்களை கொஞ்சம் படியுங்க பாதர்... இப்போ இங்கே அது தேவைதான்
அப்படீங்கறே...!
பிடாரின்னு சொன்னான் -கேட்டீங்களா? நான் என்ன பிடாரியா சொல்லுங்க... ஆலிவர்!
சேச்சே.. அவன் கிடக்கான்... விடு!


படிங்க பாதர் -காத்துக்கிட்டிருக்கோம்!
ம்ம்... வ..வந்து.. சூதாடாதவன், பிறர் சொத்துக்கு ஆசைப்படாதவன் குதிரைகளை திருடாதவன்... இவர்கள் எல்லாம் பிறவிப் பயனை அடையாத மூடர்கள்...
ஏழைகளிடமிருந்து திருடுகிறவனைவிட பணக்காரர்களைவிட மிகுந்து திருடறவன் உத்தமன்...
பாதர்... அந்த புஸ்தகத்தை கொஞ்சம் இப்பிடி கொடுங்க... நான் படிச்ச பைபிள்ளே இப்படி இல்லியே... எல்லாமே தலைகீழால்லே இருக்கு!
இதுக்கு மேலேயும் நான் வேஷம் போடத் தேவையில்லை... யாரும் அசையக் கூடாது.
ஸ்காட்! முன்னால் வந்து லூக்கோட துப்பாக்கி பெல்ட்டை அவிழ்த்துப் போடு...
என்னோட மாறுவேடத்தை நம்பி ஏமாந்த சோணகிரிகளே தெரிஞ்சுக்கோங்க... ஆரம்ப முதலே என்னோட தோஸ்துகளோடு திட்டமிட்டுத்தான் உங்களோடு வந்தேன்... எல்லார்கிட்டேயும் இருக்கிற பொருட்கள் அனைத்தும் என் கைக்கு வந்து சேரணும்!
லூக்... உன் கையை நீட்டு!
டும்!
என்கிட்டே பலிக்காது அப்பனே! கீர்த்தி வாய்ந்த லூக்கோட குறிகூட தப்பிட்டுது... என் விஷயத்திலே! மறுபடியும் விஷமம் பண்ண நெனைக்காதே - தொலைச்சுப்பிடுவேன்!


உன் இஷ்டதேவதையை வேண்டிக்கோ... ஒண்ணு... ரெண்டு... மூணு...
டுமீல்!
என்னோட தோட்டா ரொம்ப சிறிசு... நான் சுட்டப்போ அது திசை மாறி போயிடலை... நான் நெனைச்ச மாதிரி கச்சிதமா உன்னோட துப்பாக்கி குழலுக்குள்ளே நொழைஞ்சு அதை அடைச்சுக்கிட்டது
?
ஆரம்ப முதலே உன்மீது எனக்கு சந்தேகம்! பாதிரியார் வேஷம் போட்டு ஏமாத்தறது ஒண்ணும் புது யுக்தி இல்லை... ஏற்கனவே ரெண்டு கோமாளிகளை இந்த வேஷத்திலே புடிச்சிருக்கேன்
ஸால்ட் லேக் போனதும் உன்னை போலீஸ்கிட்டே ஒப்படைச்சுடுவேன்... அப்புறம் உன் தலையெழுத்துப்படி நடக்கும்!
அதையடுத்து சீக்கிரமே அவர்கள் ஸால்ட் லேக் ஸிடி சென்றடைந்தார்கள்
கோச்சு வண்டி வருது... கோச்சு வண்டி வருது
வந்து சேருவீங்கன்னு நான் நம்பவே இல்லை!
ஒரு போக்கிரியை கொண்டு வந்திருக்கோம் ஷெரீப்... உங்ககிட்டே ஒப்படைக்க!
இங்கே இருக்கிற ஜனங்களுக்கு போக்கர் தெரியுமோ என்னவோ.. தெரியாவிட்டாலும் நொடியிலே கத்துக் கொடுத்து ஆட்டத்தை துவக்கிடமாட்டேனா!
நாளை பார்ப்போம்... ஸ்காட்!
நாளை நாம கார்ஸன் ஸிடிக்கு பயணமாகும்போது வழியில் கிரேட் ஸால்ட் லேக் பாலைவனத்தை கடக்க வேண்டியிருக்கும்... அங்கே காக்கை இராது... நம்மை தாக்க எவனும் வரமாட்டான்...
மறுநாள் காலை -
கார்ஸன், ஸாக்ரமெண்டோ மற்றும் சான்பிரான்ஸிஸ்கோ போகிற பாசஞ்சர்கள்லாம் வந்து வண்டியிலே ஏறி குந்துங்க
ஒரு நிமிஷம் பொறு -
ஸ்காட் வர்றானா - மறுபடியும் அதே வேஷத்திலே... ஹா..ஹா


ஹலோ லூக்...! நேற்று நான் தற்செயலா சந்திச்ச சகோதர ஆட்டக்காரர் இவர்... பெயர் புஷ்புல்... ரெண்டு பேரும் சேர்ந்தே பயணம் செய்யறதுன்னு தீர்மானிச்சிருக்கோம்
சுத்தம் பண்ணிட்டு வந்திடறோம் - நொடியிலே!
அந்த ராஸ்கலையும் வண்டியிலே ஏத்திக்கப் போறியா?
ஆமா...! பாதர் வேஷத்திலே வந்தவனை ஷெரீப் கிட்டே ஒப்படைச்சிட்டோ-மில்லையா... அந்த இடம் காலியாத்தானே இருக்கு!
யீ..யீ...ஹி ரஷ்டி! ஹா... க்ளவ்டி! ஹூப்... விஸ்கி! ஹோ... கிரேஸி!
அதையடுத்து எங்கு நோக்கினும் சுத்தமான வெள்ளைத்தாளைப் போல பரந்து விரிந்து கிடந்த ஸால்ட் பாலைவனம் வழியாக பயணம் போய்க் கொண்டிருந்தார்கள்.
ஸ்டப்பிள்... மூணு பேரா ஆடுவோமா...?
நானும் போய் சேர்ந்துக்கறேனே!
நோ... கூடாது!
ஒரேயடியா போரடிக்குது டியர்...
சரி... போய் தொலைங்க...! நல்லா பாடம் கத்துக்கப் போறீங்க
ஆயிரத்துக்கு ஒண்ணு - முதல் கார்டு ஆட்டியன் ஆஸ்!
ரெண்டாயிரத்துக்கு ஒண்ணு அது ஆட்டியன் ஆஸ் இல்லை!
அது தப்புன்னு மூவாயிரத்துக்கு ஒண்ணு கட்டறேன்
...சீட்டைத் திருப்பு... ஸ்டப்பிள்
ஹாய்ய்... ஸ்பேடு ஆஸ்... ஸ்பேடு ஆஸ்... அரபெல்லா - நான் ஜெயிச்சுட்டேன்!


ஒரு வழியா பாலைவனத்தை கடந்திட்டோம்... ஸ்டேஜ் ஸ்டேஷன் வந்திட்டிருக்கு!
4500... 4600 ... 4700
அடியே... இறங்கி வா!
வாங்க... வாங்க... கறியும், பீன்ஸும் சூடா தயாரா இருக்கு...
?!?
நீ சீட்டை பிடிக்கற முறையிலேதான் கோளாறு...
அதெல்லாம் ஒண்ணுமில்லே... அதிர்ஷ்ட தேவதை அப்பப்போ குழம்பிப் போயிடுது... அவ்ளோதான்
இவ்வாறாக ஆரவாரமின்றி கார்ஸன் ஸிடி நோக்கி தொடர்ந்தது பயணம்!
கறியும் பீன்ஸும் ரெடி
பணமா... இல்லை உயி-
சே... படம் பிடிக்கக்கூட அவகாசம் தரமாட்டேங்கிறியே லக்கி லூக்!
கறியும் பீன்ஸும் ரெடி
என் சுருட்டை பத்த வையிடி!
ஒருவாறாக அவர்கள் கார்ஸன் ஸிடி சென்றடைந்தபோது
அப்பாடா... வேற பிரச்சனை இல்லாம ஸாக்ரமெண்டோ போய் சேர்ந்திட்டா போறும் அங்கேர்ந்து சான்பிரான்ஸிஸ்கோ போறதுக்கு வழித்துணையா வெல்ஸ் பார்கோ கம்பெனி ஆட்கள் வந்திடுவார்கள் இல்லையா?
உண்மைதான்... ஆனால் ஆபத்தே இனிமேல்தான் இருக்கு லக்கி!


ப்ளாக் பார்ட்டின் ஆதிக்கத்தில் உள்ளது இந்தப் பகுதி - அவனைப் பத்தி கேள்விப்பட்டிருக்கிறாயா!
இல்லை!
கலிபோர்னியாவில் ஒரு சாதாரண ஆசிரியராக இருந்தவன்தான் அந்த ப்ளாக் பார்ட்... மாணவர்கள் அவனுக்கு தீராத தலைவலி கொடுத்து வந்தார்கள்
டெரன்ஸ்... இந்த விஷமத்தை நிறுத்தப் போகிறாயா... இல்லை உன் ரைபிளை பிடுங்கி தூர எறியட்டுமா?
ஸார்... உங்களை சுட்டது நானில்லை... பில்லி!
புளுகாதேடா...! என்கிட்டே இருக்கிறது ரைபிள் இல்லை... சிக்ஸ் கன் அத்தோட... நானா இருந்தா இப்படி குறி தவறியிருக்காது...
2+2=4
ஒரு பள்ளி விடுமுறை காலத்தில் அரிப்புத் தாங்கவில்லை பார்ட்... க்கு மாணவன் ஒருவனிடமிருந்து கைப்பற்றிய ரைபிளோடு முகமூடியணிந்து சாலையில் நின்று ஒரு கோச்சு வண்டியை வழிமறித்தான்
அன்று தொடக்கம் இன்று வரை பார்ட் 27 கோச்சு வண்டிகளை வழி மறித்து கொள்ளையடித்திருக்கிறான்...
இது வரை யாரும் அவனுடைய முகத்தை பார்த்ததில்லை... கால்நடையாகவே வருவான் போவான்... கையில் ஒரு விநோதமான பை இருக்கும்... தான் காலி பண்ணிய பொக்கிஷ பெட்டியினுள் கவிதை ஒன்றை போட்டுச் செல்வது அவனோட தனி முத்திரை!
அப்படியொரு பரதேசிப்பயலைக் கண்டு பயப்பட ஆள் நானில்லை ஹாங்...
சாதாரண மனுஷனா அவனை நெனைச்சுடாதே... மாயாவியாக்கும் அவன் - வந்து போன சுவடே இருக்காதுன்னு பேசிக்கிறாங்க
மறுநாள் காலை -
ஸாக்ர மெண்டோ, சான்பிரான்ஸிஸ்கோ போறவங்க யாராச்சும் இருந்தா ஏறிக் குந்துங்க
ஏய்... என்னப்பா ஆச்சு உங்களுக்கு... வழக்கமான ஊர்கோலம் என்ன ஆச்சு?
கிளம்ப எங்களுக்கு இஷ்டமில்லைதான்...! ஆனா எங்க 'திறமை' இங்கே எல்லோருக்கும் தெரிஞ்சு போச்சு!


ஹாங்க்... ஏன் முகத்திலே சுரத்தே இல்லை!
நான் மட்டுமில்லேப்பா... பாசஞ்சர்களுக்கும் வயத்தை கலக்குது! குதிரைகள் கூட மிரண்டு போய் இருக்கிறதை கவனி!
சரி... நான் முன்னாலே போறேன்... பேய் பிசாசுகளை கண்டு மிரள்கிற ஆள நானில்லை!
மாறுவேடம் போட்டுக்கிட்டு நிற்பானாமே!
ப்ளாக் பார்ட்!
ஊய்ய்... யார் அங்கே
வண்டியை அங்கேயே நிறுத்து ஹாங்க்...! பிரச்சனையை நானே சமாளிச்சுட முடியும்!
நா... நானும் வரணுமா பிரதர்?
ஓ.கே. மிஸ்டர்! பேய் பிசாசுகள்லே எனக்கு நம்பிக்கை கிடையாது. வேடத்தை நீயாகவே கலைக்கிறாயா... இல்லை - நான் வந்து அவிழ்த்தெறியட்டுமா...
கல்லுளி மங்கனாட்டம் நிற்கிறானே... ஜாலி ஜம்பர் நீ இங்கேயே நில்லு!
உத்தரவாதம் தர்றதுக் கில்லை...



முகமூடியை அகற்றச் சொன்னேன்...
அடக் கடவுளே...
துப்பாக்கியை கீழே போட்டு விட்டு கைகளை உயர்த்து லக்கி லூக்
விஷமம் பண்ண நினைக்காதே - இல்லையேல டிரைவரை சுட்டுடுவேன்... பாசஞ்சர்கள் அப்படியே அ ாம ஸீட்லே உட்கார்ந்திருங்க...
வெளியே வந்து உன்னை ஒரு படம் புடிக்க அனுமதி உண்டா ப்ளாக் பார்ட் ?
வா... ஆனா, வேற சேஷ்டை எதுவும் கூடாது - புரிஞ்சுதா?
டிரைவர்... பெட்டகத்தை திறந்து தங்கத்தை அள்ளித்தா என்னிடம்!
அசையாம நில்லுப்பா...
'கவிதை' எழுதி போட்டுப் போக அவகாசம் இல்லை... அதனாலே நேரடியாவே பாடிடறேன்!
குள்ள நரி கூட்டத்துக்கும்... மொள்ளமாறி கும்பலுக்கும்... பொல்லாத்தனம் சொல்லித் தந்தவன் நான்...
அட... தேவுடா... பெட்டி முழுக்க கல்தான் இருக்கு!



என்னது?
கல்லா?
இந்தா .. நீயே பார்த்துக்கோ
!
ஹாங்க்.., குனிஞ்சுக்கோ!
டுமீல்!
தாங்க்யூ! இனி நீ இஷ்டம் போல் அசரலாம்
அட... புயல் வேகத்திலே ஓடிப் போயிட்டானே... விரட்டிப் புடிக்கிறது லேசான காரியமில்லை
சமர்த்துடா கண்ணா... பெட்டியிலே நீ கல்லை நிரப்பி வச்சதைத்தான் சொல்றேன்
கல்லை நான் நிரப்பி வச்சேனா... நீ என்ன சொல்றே?
நீ இல்லைன்னா... அப்போ - என் தங்கம்?
இங்கே நிக்கிறதிலே அர்த்தமில்லை... ஸாக்ரமெண்டோ போய் மிச்சத்தை விவாதிப்போம்.
ஐயோ நயினா... என் தங்கம் என்ன ஆச்சு?
பதறாதே ஸ்டப்பிள்...
நீ கடனுக்கு ஆடலாம்!
அட போங்கப்பா பெட்டியிலே இருக்கிறதைத்தான் நான் பந்தயமா வச்சேன்... கல்தான் இருக்குன்னா அதைத்தான் நீங்க எடுத்துக்கணும் - இந்தா புடி!





தொடர்ந்தது பயணம் -
வெல் கம் டு ஸாக்ரமெண்டோ...!
உன் வெல் கம்மை கொண்டு போய் உடைப்பிலே போடு... கொண்டு வந்த தங்கம் மாயமா மறைஞ்சு போச்சுதே... எப்படின்னு நொந்து போய் வந்திருக்கோம்
தங்கம்தானே... இங்கே பத்திரமா இருக்கு! சாதாரண வண்டி மூலமா வந்து சேர்ந்திட்டுது... வெல்ஸ் பார்கோ எப்போதும் ஆபத்தோட விளையாடறதே இல்லை... அதனாலேதான் இப்படி ஒரு தந்திரம்...
...நீங்க வந்த பாதையிலே அடிக்கு ஒரு போக்கிரி நின்னுட்டிருப்பான்னு அவங்களுக்குத் தெரியும்
அப்போ... தேவையில்லாம நாங்க உயிரை பணயம் வச்சு ஆர்ப்பாட்டம் பண்ணியிருக்கோமா...?
இப்படி நீ நொந்து போகத் தேவையில்லேப்பா... ஒரு முக்கியமான உண்மையை நீ உறுதிப்படுத்திட்டியே - அதான்... வெல்ஸ் பார்கோவின் பயணம் என்னிக்குமே தடைப்பட்டதில்லைங்கிற விஷயம்!
தங்கம் இருக்கிற நிஜபெட்டி இதோ... எடுத்துப் போங்க - கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடு கூட வரும்... இந்த தந்திரம் நமக்கும் ப்ளாக் பார்ட்டுக்கும் மட்டுமே தெரிஞ்ச இரகசியமா இருக்கட்டும்.
இதைப் பாரேன்... படம் அட்டகாசமா வந்திருக்கு!
ப்ளாக் பார்ட்டை இனம் கண்டு அரெஸ்ட் பண்ண அதிகாரிகளுக்கு இந்தப் படம் உதவியா இருக்குமா?
சபாஷ்... அவனோட அங்கியில் லாண்டரி அடையாளம் இருக்கு!
KING LI FOO S. FRANCISCO
'அந்த அடையாளத்தை வைத்து ப்ளாக்பார்ட் யார் என்ற உண்மையை கண்டுபிடித்து ஆசாமியை கைது செய்துவிட்டார்கள் துப்பறிவாளர்கள். அதில் கேலிக் கூத்தான சங்கதியாதெனில் வெல்ஸ்பார்கோ துப்பறிவாளர்கள் வாடிக்கையாக வந்து போகும் ரெஸ்டாரண்டில் தான் அப்பாவி வேடத்தில் அடிக்கடி வந்து சாப்பிட்டு விட்டுப் போவானாம் அந்த போக்கிரி.'
பயணத்தின் இறுதிக் கட்டம் -
யீ... ஹா... ஒயிட்... ஃபுட்! ஹா... பெபிட்டோ...! ஹுப் ஜானி ஹோ... பஸ்ஸார்ட்!


அவர்கள் சான்பிரான்ஸிஸ்கோ
சென்றடைந்தபோது அங்கே தடபுடலான வரவேற்பு கிடைத்தது...
கோச் வண்டிக்கு நல்வரவு!
சான்பிரான்ஸிஸ்கோ வந்தாச்சு... எல்லோரும் இறங்குங்க
அது ஒரு வித்தியாசமான பயணம் - பயணிகள் பலரின் வாழ்க்கை முறையை அது தலைகீழாக மாற்றிவிட்டிருந்தது...
அடியே அரபெல்லா... கெலித்த ரொக்கத்தை வச்சு ஒரு மதுபானக் கடை திறக்கப் போறேன்
கொஞ்சம் சிரிங்க...
க்ளிக்!
அந்த தங்கத்தை வச்சு என் செய்யப்போறே ஸ்டப்பிள்?
தெரியலை...! மறுபடியும் தரமான தளவாடங்களை சேகரிச்சுக்கிட்டு மறுபடியும் தங்கம் தோண்டி எடுக்க போகலாம்னு நெனைப்பு!
நல்ல ஐடியா...! நானும் வரேனே... சேர்ந்து செஞ்சா எந்தக் காரியமும் நல்ல பலனைத் தரும்!
லக்கி லூக்கின் பெருமையை பறைசாற்ற ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தது வெல்ஸ் பார்கோ நிறுவனம்
வெல்ஸ் பார்கோ
மெனு
லைன் கறி ஸாலாடும் பீன்ஸும்
பீன்ஸ் சூப்போடு லைன்கறி ரோஸ்ட்
லைன் கறிக்குழம்பு + பீன்ஸ் குருமா
ஐஸ்கிரீம் (அதிரடி வாசனையில்)
இன்று பாராட்டப்படும் நபரின் சாதனை வெல்ஸ் பார்கோவின் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் எழுதப்படும்.
ஙே... ஐஸ் கிரீமிலும் கறி + பீன்ஸ் வாசனை வருதே! ஹே... லக்கி - எங்கே கிளம்பிட்டியா?
யா...!
தனிமையே என் துணைவன் - தனிமையே என் வாழ்க்கை
(முற்றும்)

# நரகத்தைப் பார்த்தேன்! (11)





அம்மா!... வேதனையைத் தவிர நீ வேறு எதையுமே காணவில்லையே... எல்லாமே நல்லநிலைக்கு வந்து கொண்டிருக்கும் போது நீ எப்படி உயிரை விட்டாய்?!
முதல் பேரக் குழந்தையை அவள் கொஞ்சி
வேண்டும் என்றல்லவா விரும்பினேன்... எல்லாமே போச்சு... எல்லாமே போச்சு...
இப்போது நீங்கள் அஸ்தியை எடுத்துச் செல்லலாம்.


ஒ... ஒரு எலும்பைக் கூட காணோமே!!
இந்த வெள்ளை நிற பவுடர் தான் அவளது உடம்பில் இருந்து கிடைத்த அஸ்தியா?
நாசமாய் போகட்டும் அந்த அணுகுண்டு! அதன் கதிர்வீச்சு என் அம்மாவின் எல்லா எலும்புகளையும் விழுங்கிவிட்டதே! அவள் இறந்த பின்பும் கூட அவளை அப்படியே விழுங்கிவிட்டதே...
அந்த நாசமாய் போன அணுகுண்டு பற்றி நான் படம் வரைவேன்! என்னுடைய படங்கள் மூலம் அதற்கு எதிராகப் போராடுவேன்! அவற்றை அழிப்பேன்!!
என் அம்மா இறந்து ஐந்து வருடமாகிவிட்டது அணுகுண்டின் கோரகாட்சிகள் பற்றி ஏராளமான சித்திரங்களை வரைந்து விட்டேன்.
தொப்
இப்படி ஏன் செய்தாய்?
அந்த ஐஸ்கிரீம் எனக்குப் பிடிக்கல!


அதற்குப் பதிலாக எனக்கு கேக் தருவாயா, அம்மா?
ஓ... தருகிறேன்
குழந்தைகளுக்கு இப்போது - நல்ல நாட்கள் தான்...
அச்சச்சோ! நேரமே மறந்து போச்சே!
'பாய்ஸ் ஜம்ப்' என்ற இதழுக்கு படம் வரைந்து கொடுக்கும் நேரம் நெருங்கி விட்டதே.. சீக்கிரம் போகணும்..
இப்ப வீட்டுக்குப் போய் வேலையைத் துவக்க வேண்டியது தான்!
''படம் வரைவதை உன்னுடைய பாதையாகத் தேர்ந்தெடுத்துவிட்டாய், கெய்ஜி உன்னால் முடிந்ததை நல்லபடியாகச் செய்!''
அப்படியே செய்வேன் அம்மா! அப்படியே செய்வேன்!
(முற்றும்)


லயன் வாசகர்
ஸ்பாட்-லைட்!
வாசக ஓவியர்-
B. மணி
ஜல்லிபட்டி.
விச்சு & கிச்சு
யெய். கிச்சு..! இந்த பூமரங்கை எப்படி வீசறது?
ம்..ம்..! இது மாதிரி அறிவுப் பூர்வமான விசயங்கள் என்னை மாதிரி அறிவாளி-களுக்குத்தான் தெரியும்!
நன்றாகக் கவனி விச்சு..! சென்ற வேகத்தில் என்னி-டமே திரும்பி வரும்பார்..!
கத்து வீட்டு ஜானுக்கு செம அடி...
எந்தக் கஸ்மாலம் என்னைத் தாக்கியது!
விஷ்...
புடீ..
பலே..! நீ சொன்-னது போலவே உன்னிடமே திரும்பி வந்துட்டுதே!



விரைவில் வருகிறது...!
சூ... மந்திரகாளி!
லயன் காமிக்ஸ்
லக்கி லூக்கின் அடுத்த சாகஸம்!